சுருக்கம்

பொதுப் பணிகள் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண்-110-ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பணிபுரியும் 'துப்புரவுப் பணியாளர்களை', 'தூய்மைப் பணியாளர்கள்' (Cleanliness Workers) என அழைப்பது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு – அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் பெயர் மாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எப்) துறை**

**அரசாணை (நிலை) எண். 136** — **நாள்: 18.12.2020**

**சார்வரி, மார்கழி-03**

**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.5.2020.
2. தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை-5, கடித எண்.91/தநா.அ.அ.ஒ/2020, நாள். 26.05.2020.

*****

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், சட்டமன்றப் பேரவை விதி எண்-110-ன் கீழ், 19.03.2020 அன்று, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் 'துப்புரவுப் பணியாளர்கள்', தூய்மைப் பணிகளை செய்து வருகிறார்கள், இப்பணியாளர்களின் செயல்பாடுகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடவும், அனைத்துத் 'துப்புரவுப் பணியாளர்களும்', இனி 'தூய்மைப் பணியாளர்கள்' (Cleanliness Workers) என்று அழைக்கப்படுவார்கள் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், சட்டமன்றப் பேரவை விதி எண்-110-ன் கீழ் அறிவிக்கப்பட்டவாறு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் 'துப்புரவுப் பணியாளர்களாக' பணிபுரிந்து வரும் பணியாளர்களின் செயல்பாடுகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், அனைத்துத் 'துப்புரவுப் பணியாளர்களும்', இனி 'தூய்மைப் பணியாளர்கள்' (Cleanliness Workers) என்று அழைக்கப்படுவார்கள் என ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை 2-ல் காணும் கடிதத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை-5, மேற்குறிப்பிட்ட அரசாணையின் அடிப்படையில், அனைத்து துறைகளில் பணிபுரியும் 'துப்புரவுப் பணியாளர்களுக்கும்', பெயர் மாற்றம் செய்வதற்கான ஆணையினை வழங்கிட வேண்டுமென்று அரசை கேட்டுக்கொண்டுள்ளது.

4. மேற்குறிப்பிட்ட கோரிக்கையினை, அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு அடிப்படைப் பணிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள கீழ்காணும் பதவிகளை 'தூய்மைப் பணியாளர்கள்' (Cleanliness Workers) என பெயர் மாற்றம் செய்து ஆணையிடுகிறது.

| வரிசை எண் | பதவி | தமிழ்நாடு அடிப்படைப் பணி விதிகளில் வகைப்பாடு |
|---|---|---|
| 1. | துப்புரவாளர்கள்<br>(Cleaners) | பிரிவு – IV, வகை – 7<br>Class –IV, Category -7 |
| 2. | துப்புரவாளர்கள்<br>(Sanitary Workers) | பிரிவு – IV, வகை – 8<br>Class -IV, Category -8 |
| 3. | துப்புரவாளர்கள்<br>(Sweepers) | பிரிவு - IV, வகை – 12<br>Class –IV, Category -12 |
| 4. | காவலர்கள்மற்றும் துப்புரவாளர்கள்<br>(Watchmen – cum – Sweepers) | பிரிவு - IV, வகை – 32<br>Class –IV, Category – 32 |
| 5. | துணைத் துப்புரவாளர்கள்<br>(Assistant Sweepers) | பிரிவு - IV, வகை – 34<br>Class –IV, Category -34 |
| 6. | நீர்கொணர்பவர் மற்றும் துப்புரவாளர்<br>(Waterman – cum – Sweeper) | பிரிவு - IV, வகை – 79<br>Class –IV, Category -79 |

5. இது குறித்து தமிழ்நாடு அடிப்படைப் பணி விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

6. மேற்காணும் ஆணையின்படி, அனைத்து சார்நிலைப் பணிகளின் (Subordinate Services) கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, 'Cleaners / Sanitary Workers / Sweepers' (துப்புரவாளர்கள்) போன்ற பதவிகளை, 'தூய்மைப் பணியாளர்கள்' என பெயர் மாற்றம் செய்ய உரிய பணி விதிகளில் திருத்தம் மேற்கொள்ளுமாறு, அனைத்து துறைகளுக்கும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சீ.ஸ்வர்ணா
அரசு செயலாளர்

**பெறுநர்:**

அனைத்துத் துறைச் செயலர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்து அரசுத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள்.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA), சென்னை 18.
உள்ளுறைத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு / தெற்கு / கிழக்கு / தலைமைச் செயலகம்), சென்னை-1 / 35 / 8 / 9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை – 104 / மதுரை 625 023.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

**நகல் :**

மாண்புமிகு அமைச்சர் (மீ.வ (ம)ப.நி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு தலைமைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலர், சென்னை-9.
அரசு செயலாளரின் முதன்மைத் தனிச்செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் / நிதித் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(நி.சீ.2) துறை, சென்னை-9 (அரசு மற்றும் அக இணையதளத்தில் வெளியிடுவதற்காக).
அனைத்து அலுவலர்கள் மற்றும் பிரிவுகள், ப.ம.நி.சீ துறை, சென்னை-9.
தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை - 5.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

18/12/2020

பிரிவு அலுவலர்